ඉදිකිරීම් කර්මාන්ත සංවර්ධන අධිකාරිය
நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை
CONSTRUCTION INDUSTRY DEVELOPMENT AUTHORITY
නාගරික සංවර්ධන හා නිවාස අමාත්‍යාංශය
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
MINISTRY OF URBAN DEVELOPMENT AND HOUSING

CONSTRUCTION INDUSTRY DEVELOPMENT AUTHORITY

මගේ අංකය. எனது இல. My No. 1/9/3/i (b) | ඔබේ අංකය. உமது இல. Your No. | දිනය. திகதி Date 27.01.2023

அமைச்சு செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்

**இலங்கையில் "அடையாளம் காணப்பட்ட நிர்மாணப் பணிகளுக்கு" நியம ஏல ஆவணங்களை (SBDS) கட்டாயமாகப் பயன்ப டுத்துவதற்கான தேவைப்பாடு**

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) என்பது 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட நிர்மாணக் கைத்தொழில் துறையின் உயர் ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகாரசபையாகும். இது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது.

2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு "அடையாளம் காணப்பட்ட நிர்மாணப் பணியும்", 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் பிரகாரம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பிரிவு 30 மற்றும் 38 இன் கீழான ஒழுங்கு விதிகளின்படி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்கு இணங்க நிறைவேற்றப்படல் வேண்டும்.

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) சட்டத்தின் பிரிவு 46 இன் பிரகாரம் எந்தவொரு தரப்பினரும் தகுதி வாய்ந்த நபரை ஆலோசகராகவோ அல்லது பதிவுசெய்யப்பட்டஒப்பந்ததாரராகவோஏதேனும் அடையாளம் காணப்பட்டநிர்மாணப் பணியில் ஈடுபடுத்தினால் அந்த நோக்கத்திற்காக அதிகாரசபையினால் குறிப்பிடப்பட்டுள்ள நியம ஆவணங்களைப் பயன்படுத்த வேண்டுமெனக் கூறுப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் உட்பிரிவு 46 இன் எற்பாடுகளின் பிரகாரம் நியம ஏல ஆவணங்கள் (SBD's) நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் (CIDA) வெளியிடப்படுகின்றன. எனவே,எந்தவொரு அடையாளம் காணப்பட்ட நிர்மாணப் பணியிலும் தகுதிவாய்ந்த நபரை ஆலோசகராக அல்லது பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரராக ஈடுபடுத்தும் எந்தவொரு தரப்பினரும் அதிகாரசபையினால் குறிப்பிடப்பட்டுள்ள நியம ஆவணங்களைப் பயன்படுத்தல் வேண்டும்.

எனவே, இலங்கையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு 'அடையாளப்படுத்தப்பட்ட நிர்மாணப் பணிக்கும்' நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) இனால் வெளியிடப்பட்ட நியம ஏல ஆவணங்களை (SBDs) கடைப்பிடிக்க வேண்டிய தேவையை நாம் வலியுறுத்துகின்றோம்.

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) நியம ஏல ஆவணங்களில் "இந்த ஏல ஆவணத்தின் தொகுதி 1 இல் மாற்றங்கள் அல்லது திருத்தங்களை அதிகாரசபையின் முன் அனுமதியின்றி மேற்கொள்ளப்படலாகாது. தொகுதி 2,பிரிவு 2- ஏலத் தரவு, பிரிவு 4a - ஒப்பந்தத் தரவுமற்றும் பிரிவு 4b–விசேட ஏற்பாடுகளில் மட்டும் மாற்றங்களை செய்ய இடமளிக்கப்படும்.

எனவே, நியம ஏல ஆவணங்களை (SBD) கடைபிடிக்கத் தவறுவது அல்லது நியம ஏல ஆவணங்களில் (SBD) குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மாற்றுவது, நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவதாகக் கருதப்படும். எனவே அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அது குற்றமாகக் கருதப்படும். அவ்வாறான சூழ்நிலையில், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) சட்டத்தின் 56 வது பிரிவின்படி தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ம.ப/2

"සව්සිරිපාය", 123, විජේරාම මාවත, කොළඹ 07. "சவ்சிரிபாய", 123, விஜேராம மாவத்தை, கொழும்பு 07. "Savsiripaya", 123, Wijerama Mawatha, Colombo 07.
දුරකථන தொலைபேசி Telephone : +94 11 2686092, 2677043, 2699801, 2695965 ෆැක්ස් பெக்ஸ் Fax : +94 11 2699738 E-mail : info@cida.gov.lk Website : www.cida.gov.lk

சட்டத்தின் பிரிவு 67 இன் பிரகாரம் "அடையாளம் காணப்பட்ட நிர்மாணப் பணிகள்" பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன:

(அ) பத்து மில்லியன் ரூபாய்க்கு மேல் அல்லது அமைச்சரால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் கூடுதல் பெறுமதியைக் கொண்ட அனைத்து கட்டிடங்கள், கட்டமைப்புகள் அல்லது பொது பயன்பாட்டிற்கான வசதிகள் மற்றும் வசதிகளை உள்ளடக்கிய கட்டிடங்கள் அல்லது கட்டமைப்பு அல்லது நிலப்பரப்பு, மற்றும்

(ஆ) சுற்றுச்சூழல், புவியியல் மற்றும் கலாச்சார மரபுரிமைகளை ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களின் அனுமதி தேவைப்படும் அனைத்து கட்டிடங்கள், கட்டமைப்புகள் அல்லது நிலப்பரப்புகள்.

எந்தவொரு தனி உரிமையாளரினாலும் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக நிர்மாணிக்கப்பட்ட எந்தவொரு தனியார் குடியிருப்புக் கட்டிடமும் "அடையாளம் காணப்பட்ட நிர்மாணப் பணிகள்" என வரைவிலக்கணப்படுத்தப்பட்ட வரையறையிலிருந்து விலக்களிக்கப்படும்.

ஒப்பம்
**டபிள்யூ.எஸ். சத்தியானந்த,**
செயலாளர்
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
பதில் தவிசாளர்
நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை